සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

## மூன்றாந் தவணைப் பரீட்சை - தரம் 06 - 2023
## Third Term Test - Grade 06 - 2023

## கணிதம் - I

நேரம் : 02 மணி.

**பெயர்/சுட்டிலக்கம் :** ..........................................................................................................................................

**எல்லா வினாக்களுக்கும் இத்தாலிலேயே விடை எழுதுக.**

01. தரப்பட்டுள்ள உருக்களில் வட்ட வடிவத்தைக் கொண்ட உருக்களை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.



i ii iii iv


02. கிடைத் தளத்தை பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தும் கருவி .....................................................................

ஆவதோடு நிலைக்குத்துத் தளத்தை பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தும் கருவி ............................ ஆகும்.

03. $\mathbf{3^2 = 2^3}$ இது உண்மையாகுமா? காரணம் தருக.

04. சுருக்குக. $\frac{7}{12} + \frac{1}{3}$

05. எண்சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்ணை எழுதுக.




06. **1997 மார்ச் 15** எனும் திகதியை சர்வதேச நியம முறையில் எழுதுக.


07. 3245 எனும் எண்ணில் 2 இனால் வகைகுறிக்கும் எண் 4 இனால் வகைகுறிக்கும் எண்ணின் எத்தனை மடங்காகும்?


08. தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் சரியெனவும் ( ✓) பிழையாயின் பிழை எனவும் ( ×) எதிரே உள்ள அடைப்பினுள் எழுதுக.

- கனவுருவில் சதுரவடிவ முகம் காணப்படலாம் ( )
- நான்முகியில் முகங்களினதும், உச்சிகளினதும் எண்ணிக்கை சமனாகும். ( )
- சதுரமுகியில் உச்சிகளினதும் முகங்களினதும் எண்ணிக்கைகளை கூட்டும் போது விடை 20 ஆகும் ( )

---

09. A, B, C ஆகிய பெட்டிகள் தராசு ஒன்றின்மீது வைக்கப்பட்டுள்ள விதம் இரு உருக்களிலும் காட்டப்பட்டுள்ளன. பெட்டி (C) இன் திணிவைக்காண்க.





..........................................


---

10. வகுப்பு ஒன்றிலுள்ள 8 மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு 92 புத்தகங்கள் உள்ளன. எல்லோருக்கும் சம அளவான புத்தகங்கள் கிடைப்பதற்கு இன்னும் எத்தனை புத்தகங்கள் தேவை எனக் காண்க.

---

11. தரப்பட்டுள்ள தொகுதிகளுக்கு பொதுப்பண்புகளுக்கேற்ப பொருத்தமான பெயர்களை எழுதுக.




.......................................... ..........................................

---

12. ஐந்தாவது முக்கோணி எண்ணை புள்ளிக் கோலத்தில் குறித்துக் காட்டி அதன் பெறுமானத்தையும் எழுதுக.

---

13. பாத்திரம் ஒன்றில் $2l\ 300ml$ குளிர்பானம் உள்ளது அதனை மில்லி லீற்றரில் தருக.

---


14. 6 ஆவது சதுர எண்ணும் 8 வது முக்கோண எண்ணும் சமனாகும் என ராஷித் கூறினான். இக்கூற்று சரியானதா, தவறானதா என்பதை விளக்குக.

---

15. 32 எனும் எண்ணை 2 இன் வலுவாக எழுதுக.

16. விரிகோணத்திலும் பார்க்க பெரிய கோணங்களின் இரண்டு வகைகள் எழுதுக.

17. நான்முகி ஒன்றை உருவாக்கிக் கொள்ளக்கூடிய வலையுருவின் ஒரு பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது. அவ் வலையுருவை பூரணப்படுத்துக.



18. தரப்பட்டுள்ள தசம எண்களை ஏறுவரிசையில் எழுதிக்காட்டுக.

2.21 , 1.2 , 2.12 , 2.2

19. பெறுமானம் காண்க

26 x 100 = .....................................

2400 ÷ 10 = .....................................

20. மர்யம் பி.ப. 3.30 இலிருந்து பி.ப. 5.00 மணிவரை தொலைக் காட்சி பார்க்கிறாள் அவள் பி.ப. 5.45 இலிருந்து 7.30 மணிவரை பாடங்களை படிக்கிறாள் அவள் எவ்வேலையில் அதிக நேரத்தை செலவிடுகிறாள்.

# கணிதம் - II

**முதலாவது வினா கட்டாயமானதாகும். மேலும் நான்கு வினாக்களுடன் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

01. மதீனா தேசிய பாடசாலையின் கணிதப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரின் வழிகாட்டலில் தரம் 06 மாணவர்கள் செயற்திட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.
தரம் 06 இற்கு கடந்த 5 வருடங்களாக புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் விபரத்தை திரட்டுதல் என்ற தலைப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு படவரைபிலும் காட்டுவதற்கு வழிகாட்டப்பட்டது.
அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பூரணமற்ற அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வருடம் | வரவுக்குறி | எண்ணிக்கை |
|---|---|---|
| 2019 | 𝍸 𝍸 // | 12 |
| 2020 | 𝍸 𝍸 //// | ............... |
| 2021 | .................................... | 17 |
| 2022 | 𝍸 𝍸 𝍸 𝍸 | ............... |
| 2023 | .................................... | 23 |

i. அட்டவணையைப் பூரணப்படுத்துக. ..........................................................................................

ii. 2019 ஆம் வருடம் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் மொத்த எண்ணிக்கை ⊜⊜⊜ ஆகுமாறு படவரைபினால் வகை குறிப்பதற்கு மாணவர்கள் உத்தேசித்தனர். எனின் ⊜ இனால் எத்தனை மணவர்கள் குறிக்கப்படுவார். ..........................................................................................

iii. மேலுள்ள தரவுகளை படவரைபு ஒன்றில் காட்டுவதற்கு கிழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வருடம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 2019 | ⊜ ⊜ ⊜ |
| 2020 | |
| 2021 | |
| 2022 | |
| 2023 | |

iv. மதீனா தேசிய பாடசாலையில் புதிதாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதின் முன்னேற்றம் பற்றி நீர் கூறும் கருத்தை எழுதுக.

..........................................................................................

v. மேலுள்ள அட்டவணைக்கு ஏற்ப 3 வருடங்களில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வேறு 2 வருடங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கு சமனாகும். அவ்வாறு மேற்சொன்ன கூற்றுக்கு பொருத்தமான வருடங்கள் இரண்டும் எவை?

..........................................................................................

02. போத்தல் ஒன்றின் விளம்பரத்தாளில் எழுதப்பட்டிருந்த விபரம் பின்வருமாறு

> **அடங்கியுள்ள பொருட்கள்**
> **சீனி** *75g*
> **மாம்பழச்சாறு** 100 *ml*
> **உப்பு** *5g*
> $E_2$ **நிறவர்ணம்** *5ml*
> **நீர்** 150*ml*

i. விகிதமாக எழுதக்கூடிய பொருட்களின் இரண்டு சோடிகள் எழுதுக.

..........................................................................................................

ii. a) விளம்பரத்தாளில் திணிவை குறிப்பிட்டுள்ள பொருட்களை விகிதமாக எழுதிக் காட்டுக.

..........................................................................................................

b) அவ் விகிதத்கை எளிய வடிவில் தருக.

..........................................................................................................

iii. எளிய வடிவம் 2 : 3 ஆகவுள்ள விகிதங்களைக் கொண்டுள்ள பொருட்கள் விளம்பரத்தாளில் உள்ளன. அப்பொருட்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

..........................................................................................................

iv. விளம்பரத்தாளில் குறிக்கப்பட்டுள்ள பொருட்களில் விகிதமாக எழுத முடியாத பொருட்களின் சோடியொன்றை எழுதுக.


..........................................................................................................


v. மாம்பழச்சாறு 1*l* இன் விலை ரு. 720 எனின் மேற்படி போத்தலிலுள்ள மாம்பழச்சாறை பெற்றுக்கொள்வதற்கான செலவைக்காண்க.

..........................................................................................................

---

03. தரம் 06 வகுப்பறையின் ஆசிரியர் மேசையின் விரிப்பு 1cm x 1cm சதுரக் கட்டங்களை கொண்டதாக வலையாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் பாடப்பதிவுப் புத்தகம் (A), இடாப்பு (B), வெண்கட்டி அழிப்பான் வைக்கும் பாத்திரம் (C), பூச்சாடி (D) என்பவற்றை வைப்பதற்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.




உதவி:  இனால் 100 $cm^2$ குறிக்கப்படுகிறது

i. கூடிய பரப்பளவைக் கொண்ட பொருள் எது. ..........................................................................

ii. குறைந்த பரப்பளவைக் கொண்ட பொருள் எது. ..........................................................................

iii. கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக?

| பொருள் | பரப்பளவு ($cm^2$) |
|---|---|
| A | |
| B | |
| C | |
| D | |

iv. மேலுள்ள எல்லாப் பொருட்களும் மேசைமீது வைக்கும் போது மேசை விரிப்பில் எஞ்சும் பகுதியின் பரப்பளவைக் காண்க.

..........................................................................................................................................

---

04. i. தரப்பட்டுள்ள குறியீடுகளில் அட்சரகணிதக் குறியீடுகளை தெரிவு செய்து எழுதுக.

| A | b | g | D | e | I |
|---|---|---|---|---|---|

ii. தரப்பட்டுள்ள கூற்றுக்களில் அட்சரகணிதக் குறியீடுகளைக் பயன்படுத்தக் கூடிய கூற்றுக்களை தெரிவு செய்க.

நாளொன்றிலுள்ள மணித்தியாலங்கள்

நாளொன்றில் ஒரு மனிதன் விழித்திருக்கின்ற மணித்தியாலங்கள்


காடு ஒன்றிலுள்ள விலங்குகளின் எண்ணிக்கை

20 இலும் குறைந்த முதன்மை எண்கள்.

iii. எழுமிச்சம் மரம் ஒன்றில் y எண்ணிக்கையான எழுமிச்சம் பழங்கள் உண்டு. 1 மணித்தியாலத்தின் பின்னர் 3 எழுமிச்சம் பழங்கள் கீழே விழுந்தன. தற்போது மரத்தில் எஞ்சியுள்ள எழுமிச்சம் பழங்களின் எண்ணிக்கையை அட்சரகணித கோவையாக தருக.

..........................................................................................................................................

iv. ஒரு வேலையாள் மூன்று நாட்களில் உற்பத்தி செய்த தூணின் நீளம் உருவில் காட்டப்பட்டுள்ளது.




a. இத்தூணின் மொத்த நீளத்தை அட்சர கணிதக் கோவையாக தருக.

..........................................................................................................................................

b. தூணின் மொத்த நீளம் 45 மீற்றர் ஆயின் t இனால் குறிக்கப்படும் நீளம் யாது?

..........................................................................................................................................


v. விளையாட்டு ஒன்றிற்காக செய்யப்பட்ட 5 அட்டைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| P | Q | R | S | T |
|---|---|---|---|---|
| a = 3 | b = 1 | c = 2 | d = 4 | e = 0 |
| a + 5 | b + 9 | 10 - c | 11 - d | 8 + e |

அட்டைகளிலுள்ள அட்சரகணித கோவைகளின் பெறுமானங்களை பிரதியிடுவதன் மூலம் கணித்து சமனான பெறுமானங்களைக் கொண்ட அட்டைகளை தெரிவு செய்து எழுதுக.

..........................................................................................................................................

05. செயற்பாடு ஒன்றிற்காக உருவில் காட்டியவாறு பெரிய சதுர அட்டை ஒன்று புள்ளிக் கோடுகளின் வழியே வெட்டப்பட்டு சில நேர் கோட்டுத் தளவுருக்கள் உருவாக்கப்பட்டன.



i. வெட்டி எடுக்கப்பட்ட தள உருக்களின் எண்ணிக்கை யாது.

..................................................................................................


ii. வெட்டி எடுக்கப்பட்ட நாற்பக்கல்களின் வகைகளை பெயரிடுக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

iii. இங்கு தரப்பட்டுள்ள உருவை இரண்டாக வெட்டுவதன் மூலம் மேலே வெட்டி எடுக்கப்பட்ட உருக்களில் இரண்டைப் பெறலாம். அவ்வாறு பெறுவதற்கு இவ்வுருவை வெட்ட வேண்டிய கோட்டை புள்ளிக் கோட்டில் குறிக்க.



iv. a) முதலாவது உருவில் வெட்டப்பட்ட இரண்டு உருக்களைப் பயன்படுத்தி செங்கோண முக்கோணி ஒன்றை உருவாக்க முடியும். அதற்காக பயன்படுத்த வேண்டிய உருக்களைப் பெயரிடுக.

..................................................................................................


b) அவ்வாறு இரு உருக்களையும் சேர்த்து உருவாக்கும் செங்கோண முக்கோணியை வரைந்து காட்டுக. இரு உருக்களும் சேறும் இடத்தை புள்ளிக் கோட்டில் குறிக்க.

..................................................................................................

---

06. இரண்டாம் தவணைப் பரீட்சையில் கணிதப்பாடத்தில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை எண்கோட்டில் குறித்துக் காட்டி வருப்பறையில் காட்சிப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

i. தரப்பட்டுள்ள எண்கோட்டில் கிழுள்ள தகவல்களை குறிக்க.
அமானி பெற்றுக் கொண்ட புள்ளிகள் 74 ஆகும்.
சிபாவின் புள்ளிகள் அமானியின் புள்ளிகளிளும் பார்க்க 6 அதிகமாகும்.
நதாவின் புள்ளிகள் அமானியின் புள்ளிகளிலும் 8 குறைவாகும்.




ii. மாணவர்கள் மூவரினதும் பெயர்களைப் பயன்படுத்தி சமனிலி குறியீடுகள் மூலம் (<, >) 3 தொடர்புகள் எழுதுக.

..................................................................................................

iii. அமானியின் வயதை கிட்டிய 10ற்கு மட்டந்தட்டுக.

..................................................................................................

iv. உமரின் புள்ளியை கிட்டிய 10ற்கு மட்டந்தட்டிய போது பெறுமானம் 90 ஆகும். உமர் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகுறைந்த புள்ளி யாது.

..................................................................................................

(8) WWW.PastPapers.WiKi (7)
Download Term Test Papers, Short Notes From One Place!

07. a)

| | | | | |
|---|---|---|---|---|
| 189 | 70 | 145 | 79 | 36 |
| 65 | 103 | 88 | 105 | 97 |
| 93 | 230 | 61 | 124 | 110 |

i. மேலே தரப்பட்டுள்ள எண் தொகுதியில் ஐந்தால் மீதியின்றி வகுபடும் எண்கள் எல்லாவற்றையும் எழுதுக.

..................................................................................................................................

ii. இரண்டின் மடங்காக அமையும் எண்கள் நான்கு எழுதுக.

..................................................................................................................................

iii. **2 இனதும் 5** இனதும் மடங்காக அமையும் எல்லா எண்களையும் எழுதுக.

..................................................................................................................................

b) எண்கள் எழுதப்பட்ட இரு அட்டைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொகுதியாக அமையும் இலக்கங்கள் | பகுதியாக அமையும் இலக்கங்கள் |
|---|---|
| 3 5 1 4 7 | 2 9 8 6 |

இவ்விலக்கங்களை மாத்திரம் பயன்படுத்தி

i. அலகுப் பின்னங்கள் இரண்டு எழுதுக.

..................................................................................................................................

ii. $\frac{1}{2}$ எனும் பின்னத்திற்கு சமவவுலுப் பின்னங்கள் இரண்டு எழுதுக.

..................................................................................................................................

..................................................................................................................................

PAST PAPERS WIKI
(8) WWW.PastPapers.WiKi (8)
Download Term Test Papers, Short Notes From One Place!



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
ඉතිහාසය
2013 - 2022
සංගීතය
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න